ப்ரஹ்மவித்யா.

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்—விகாரிஹு ஐப்பசிமீ 19உ

கலியும் நான்காச்சிரமங்களும்

(39-வது பக்கத் தொடர்பு)

அவர்களைப்பற்றித்தான் கீதாசிரியரும் ஸ்திரீகள் வைசியர்கள், சூத்திரர்கள், இவர்களும் நற்கதி யடைவார்களென்றுரைத்தனர். பின்னும் வேறிடத்திலும் சூத்திரர்களுள் தாசன், நாவிதன், கோபாலன், குலமித்திரன் அர்த்தஸீரி, ஆகிய இவர்களிடமிருந்தும் தன்னை அடிமைகொண்டாடினவனிடமிருந்தும் ஆமத்தை வாங்கிக்கொள்ளலாமென்றும் விதித்திருக்கிறது. இவர்களுக்குரிய தருமங்கள் சூத்திர கமலாகரத்தில் சொல்லப்பட்டுளது. அதன் வியாக்கியானமாகிய சூத்திரஸர்வஸ்வத்தில் எம்மாலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அங்குபார்த்துக்கொள்ளவேண்டும். அவ்விதமான சூத்திரர்கள் முன் யாவரும் தன் வர்ணத்து ஸ்திரீகளிடத்திலேயே உண்டானவர்கள். ஸஜாதியார்களென்று கூறியபடி சங்கரஜாதி யில்லாதவர்களாய்ச் சற்றுந்தவறாது தன் தருமங்களை யனுஷ்டித்துவந்தார்கள். அதனாற்றான் விதுரன், தருமவியாதன் முதலாய அனேகர் மிகுந்த பக்தியுடையவர்களாய் அனேகம் சித்தியைப் பெற்றார்களெனப் புராணங்கள் கூறுகின்றன. முற்காலத்தில் பிராமணர்கள் நான்கு வர்ணத்து ஸ்திரீகளையும் விவாகஞ் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கட்குச் சூத்திர ஸ்திரீயினிடம் ஜனித்தவர்கள் பாரசவர்கள் அல்லது பாரசிவர்கள் எனப்புராணங்களிலும் இதிஹாசங்களிலும் தரும சாஸ்திரங்களிலும் சொல்லப்படுகிறது. இப்பொழுது அவர்களைப் பிள்ளைமார்களெனச் சொல்வார்கள். வைசியனுக்குப்போல் பாரசிவனுக்குமென்றுகூறினமையால் இவர்களுக்கு வைசியரைப்போலொத்த தருமமாம். அதனாற்றான் தென்னாட்டிலுள்ள பிள்ளைமார்கள் சத்சூத்திரர்களென்று குறிக்கப்படுகிறார்கள். இவர்கள் பதினாறுதினமே ஆசௌசங் கொள்ளுகிறார்கள். வேதம், கற்பமொன்றைத் தவிர மற்ற வைசிய தருமங்களையு மனுஷ்டிக்கிறார்கள். 'ஸங்கரஜாதியாய்ப்பிறந்தவர்களுக்குச் சூத்திரர்களைப்போலவே தருமமாம்' என்று மனுவசனத்தால் இக்கா

[illegible]

லத்துதித்த சங்கராஜாதிகளும் சூத்திர தருமத்தை ஆசிரயித்தார்கள். நிற்க. இக் காலக் கொடுமையரீல் முன்னது பின்ன தாய்மாறி பிராமணர் சர்வாசாரங் களேயுந் துலேத்தனர். சூத்திரர்களோ ப்ரம்மவித்தை யைக் கற்க முயன்றுர்களென்ற கூர்மபுராணத்திற் கூறிய மொழி இப்பொழுது நன்றுய்ப் பலித்து விட்டதே. இக்காலத்துச்சூத்திரர்களின் ரீதியைச் சற்று விசாரிப்போம். சிவ சிவ; ஒவ்வொரு வர்ணத்திற்கும் பதிலாயனேகர் உதித்திருக்கிறுப்போல் இச்சூத்திர வர்ணத்திற்கும் பிரதி நிதியாகச் சிலர் தோன்றியிருக்கின்றுர்கள். பாருங்கள்! சூத்திரர்களுள் சிலர் பிராமணர்களிடம் ஊழியஞ்செய்துகொண்டு மந்திரமின்றித் தந்திரத்தாலேயே சைவத்தாலாவது வைஷ்ணவத்தாலாவது ஸம்ஸ்காரம்பெற்றுத் தீக்ஷை செய்துகொண்டு ஓராசிரியரையடுத்து சிவ விஷ்ணுபூஜைகளேயும் பஞ்ச யக்கியங்களேயும் ஆமத்தால் சிராத்தத்தையும் சிவவிஷ்ணு மந்திரங்களால் ஆன்ஹிகத்தையும் நன்கு அனுஷ்டித்து மாமிசங்களேத் துலேத்து ஸுராபானத்தை யொழித்துத் தனது கன்மங்களேப் பிராமணர்களேக்கொண்டு முடித்துத் தன் சக்திக்கேற்றவாறு ஏதாவது கொடுத்து வாழ் நாட்களேக் கழித்துவருகிறுர்கள். ஆயினும் வெகு சூத்திரர்கள் பூர்ணமாய்க் கள்ளேக்குடித்துக் கர்ப்பவாசம் முதல்மாம்ஸத்தாலேயே வளர்ந்து ஒரு வியவஸ்தையுமில்லாமல் ஸ்திரீகளிடம்வேண்டியபடி சேர்ந்து ஆசாரம்முற்றுந்துலேத்து ஸங்கராஜாதிகள் ஸம்ஸகாரஞ்செய்விக்க நாமே உயர்ந்தவரெனப் பேசிக்கொண்டு வருகிறுர்கள்.

இவர்கள் சைவரெனப் பெயர் வைத்துக்கொண்டு காலக்கொடுமையினுல் ஆசிரியர்களாகவுமாய் விடுகிறுர்கள். வன்னியர், கள்ளர், இடையர், கணக்கர், ஏற்றுர், கவண்டர், அல்லது கைக்கோளர் இவர்களும் இக்காலத்தில் சூத்திரராய்விட்டார்கள். அவர்களும் சூத்திர தருமத்தைக்கேட்க விரும்புகிறுர்கள். இம்மட்டோ! கஷ்டம் கஷ்டம்! சிவனடியார்களாகிப் பிராமணத்துவேஷமென்ற ஒரு சமான தருமத்தால் மாத்திரம் ஸத் சூத்திரர்களுக்கும் ஆசிரியர்களாய்விடுகிறுர்கள். அவர்கள் பிராமணர்களேப்போல் அபினயஞ்செய்து சூத்திரர்களுக்கு வேதார்த்தங் கற்பிக்கின்றுர்கள். இங்ஙனம் தாசிபுத்திரர்களும் ஸங்கராஜாதியார்களும் காலபலத்தா லிவ்விதமாயிருக்குமிக்காலத்தில் சத்சூத்திரனேக்காண்பதெங்கே? இக் கோலா

பத்ரிகா:

[illegible]

ஹலத்திலும் சிலர் கன்மங்களைவிடாது அனுஷ்டித்து வருகிறார்கள். எல்லா வர்ணங்களுக்கும் எல்லா ஆச்சிரமங்களுக்கும் காலமிருத்தியுவாய் தோன்றிய இக்காலத்தில் ஸத்சூத்திரர்களெங்கே? அவர்களுள் கிரஹஸ்தரென்ற ஆசிரமபேதமெங்கே? சிவ சிவ! அதைப்பற்றி ஒன்றுஞ்சொல்லக்கூடியதில்லை. அந்தோ! தாசிபுத்திரர்களும் காஷாயந் தரித்துச் செல்வத்தால் தன்னையோக்கியனாகப்பாவித்து யாவருக்குமுபதேசஞ்செய்ய முன்வந்திருக்கிறார்களே. தகப்பனில்லாததாயின் வழியே வந்த இவர்களாசிரியரானால் சூத்திரர்களின் கிரஹஸ்ததருமத்தை என்னவென்றுரைப்போம்.

வரும்.

கடிதம்

கடிதகர்த்தர்களபிப்பிராயம் பத்திராதிபரைச்சாரமாட்டாது.

பிரமவித்தையைப் பேணுபவரில்லையே!

ஆரியச்செல்வர்களே! சிறிது இங்கு கவனியுங்கள்.

இப்பாரதகண்டத்திற்குத் திலகமென விளங்கும் தென்பாகமாகிய தமிழ் நாட்டிலுள்ள அந்தணர் குலச்செல்வர்களிடத்துச் சிறியேனாகிய யான் இச்சிறிய விஞ்ஞாபனத்தைச் செய்யத் துணிந்தேன். அதில் குற்றமிருப்பினுங் குணமிருப்பினும் பொறுத்துக் குணத்தைக்கிரகிப்பது மஹான்களுக்கியற்கையேயாதலால் இவ்விண்ணப்பத்தை மிக்க கவனத்துடன் கவனிப்பார்களென்று நம்புகிறேன்.

இப்பொழுது நம் தென்திசையில் உத்தம பிரமவித்தையான அத்வைத மதத்திற்கு அடிமைப்பட்ட அந்தணர்கள், குழாம் குழாமாக நதிதீரங்களிலேயும் பெருத்த பட்டணங்களிலேயும் மிக்கநாகரீகத்தோடும் செல்வத்தோடும் கௌரவத்தோடும் வாழ்ந்து வருகிறார்களல்லவா? அனேகருயர்ந்த உத்தியோகங்களிலேயும் மதிப்புள்ள அதிகாரத்திலேயும் இருக்கிறார்கள். அனேகர் மிராசுதார்களாய் வேண்டிய வருவாயுட

[illegible]

னும் இருக்கிறார்கள். எவ்வளவு இருந்தும் பிரயோஜனமென்ன? நம் அத்வைத வித்தை அடியோடு குன்றிப் புறமதவாதிகள் வந்துவிட்டார்கள். எங்குகண்டாலும் பாஷண்டவாதிகள் ப்ரம்மவித்தையை மறுக்கத்தொடங்கிவிட்டார்கள். அனேக தாந்திரீகர்கள் தலைவிரித்து ஆடுகிறார்கள். இச்சமயம் இவ் வித்தைக்கு நேர்ந்திருக்கும் கெதியையென்னென்று சொல்வோம். நாஸ்திகர்களும் குதர்க்கர்களும் விதண்டாவாதிகளும் ஆகமவாதிகளும் ஆனரியவாதிகளும் இதை வேரோடறுக்க அடிகோலிக்கொண்டிருக்கிறார்கள். நம் குலத்திலேயேதோன்றிய குல்லாய்த்தலையர் அனேகர் நம் ஆசாரியன் அருமொழியை அற்பமென நினைக்கிறார்கள். நமது ஆசாரியர் நம்மிடத்து அருள் மேலிட்டால் அமைத்த அருமந்திரத்தினடியையும் பார்ப்பவரைக்காணோம். முற்காலத்தைப்போல் குரு சிஷ்ய சம்பிரதாயமாய் குருவுக்குச் சிஷ்யன் சிசுருஷைகளால் பிரிய முண்டாக்கிப் பாடம்படிக்கும் தன்மையே சிறிதுமில்லை. அத்தகைய செல்வக்குருமணிகள் கிடைப்பதும் அரிதாய்விட்டது. அத்வைதா னுபவம் மேலிட்டு எல்லாவற்றையும் "[illegible] ஸாக்ஷிணீ" "சகலத்துக்கும் சாக்ஷியாயும் சச்சிதானந்த சுவரூபமாயும் இருக்கிற ஞானமே 'நானென்கிற அஹம் சப்தார்த்தமென்றும் அதே ப்ரம்மமென்றும் தெரிந்துகொள்ளுவா"னென்றபடி அத்வைதவிசாரஞ்செய்து அனைத்தையும் பற்றறவிடுத்துச் சின்மய சுவரூப நிலையைப் பெறக்கூடிய மஹான்களை ஒருவராவது நம் நாட்டில்காணக் கொடுத்துவைக்காத போயினராய்விட்டோம். குருவினிடத்தில் மிக்க பக்தியுடன் உலகத்தைவெறுத்து உத்தமமான மோக்ஷபதவியடைய ஆவலுள்ள மஹத்துக்களான முமுக்ஷுக்கள் ஒருவரையுங்காணோமே. சாதன சதுஷ்டய சம்பன்னரான பரலோகாபேக்ஷையுள்ள சம்பிரதாயமான சிஷ்யர்களொருவரையாவது நமக்குக் காணக் கிடைக்கவில்லையே. உத்தமமான வேதாந்த விசாரத்தில் அன்புள்ள ஒரு கிரஹஸ்தனையுங் காணோமே. அனேகர்

[illegible]

குருவினனுக்கிரஹமின்றித் தானே சுயமாகப் பார்த்து விட்டு அது ஒன்றுசொல்ல இவரொன்று நினைத்து ஒன்றும் பிரயோஜனமில்லாமல் அழிந்துவிடுகிறார்கள். அந்தோ இப்ப்ரம்மவித்தை வாணவித்தையைப்போல பள்ளிப்பிள்ளையுந்தொடங்கி யாதும் பயனின்றி விட்டு விடுகிறார்கள். ஆசாரியனருளியபாஷியங்கள் பிரகரணங்கள் முதலிய ஒவ்வொரு புத்தகத்தையும் சேர்த்து வைத்த ஒரு புத்தகசாலையையுங் காணேமே. ஈசுவரனேலோகத்தில் அவதரித்து துவைதவாதிகளை மறுத்து உத்தமமான அத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்திருக்க, இதையும் மறுக்கச் சிலர் தோன்றியிருக்கிறார்களே. ஓ ஓ அத்வைத ஸ்மார்த்த மஹான்களே! கனவான்களே! தனவான்களே! எமமொழியினுங் குருமொழியை ஆதரிக்கவேண்டுவ தன்றோ. குருவென்றால் நம் குருவைப்போன்ற அவதாரமுலகிலுண்டா? உலகெலாந்திக் விஜயஞ்செய்தவரன்றோ? தன்கால்நடைய ஒவ்வொரு கிராமங்களுக்குஞ்சென்று பிக்ஷை யெடுத்துண்டு தமது வாக்கிய அமிர்த வருஷத்தினால் அனைவர்மனதையுங் குளிரச் செய்து, தம் இதோபதேசத்தை முடித்து எல்லோரையும் தம் வழிப்படுத்திக்கொண்டவரன்றோ. ஒவ்வொரு காலங்களிலாபத்துக்களையெல்லாம் திரணமென ஒதுக்கி உலகுக்குழைத்தவரன்றோ. ஆனதாலெவ்வளவோ பெருமையுற்ற நம் குருநாதன் நன்மதமிப்பொழுது பலவிதமாகக் கண்டிக்கப் படுகிறதே! சிவ சிவ புறவாதியார் கையிலும் ப்ரம்மவித்தையெனும் மங்கை பிடிபடும்படியாய் நேரிடுமோ! என் செய்வோம்! அக்காலமும் வந்தால் நம்மவரென்செய்வார்கள். அப்படியுந்திரும்புவார்கள். ஆனதால் வெள்ளம் வருமுன்னே அணை போடவேண்டியது புத்திசாலிகளுக்கிலக்கணமானதால் நாமிதற்குத்தக்கதோர்நல லேற்பாடு செய்யாதிருத்தல் நன்றன்று. அத்வைதவித்தைக்குரிய அந்தணாளைவருக்கும் தனியே யொரு சபைவேண்டுவதவசியம். சங்காசாரியர் மடங்களிருக்கிறதே போதாதோவென்பார்கள்.

அதில் உள்ள விபரீதங்களை எடுத்துரைக்கவேண்டுமாயின் அளவிலாத குறைகளிருக்கின்றன. அம்மடங்களில் இருப்பவர் நம்முடைய திரவியங்களை யபகரிக்க எத்தனிக்கிறார்களேயன்றி நமக்கு உபகாரஞ்செய்பவர்களாய்க்காணோம். அவர்களை எவ்வழியிலும் நடத்த நம்மால் முடியாது. அதுவும் அனேக மடங்கள் ஒரு வம்ச சொத்தாய்ப் போய்விட்டன. அவற்றிலுள்ள சந்நியாசிகளும் ஒரு வம்ச சந்நியாசிகளே. அது அவ்வம்ம

[illegible]

டத்தில் இருக்கும் மடத்துப்பூச்சிகள் பால்மணமகலாத குழந்தைகளைத் தலைமொட்டையடித்துச் சந்நியாசவேஷமாக்கிப் பாலையும் நெய்யையுமூட்டிப் பருக்கவைத்து அவருக்கு யாதுஞ் சுதந்தரமில்லாமல் அடிமையாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் குருவெனக்கொண்டாடவும் வேண்டுமோ? இவர்கட்கு இப்பொழுது அநேகர் பரிந்து பரிந்து பணங்கொடுக்கிறார்கள். அவ்வளவும் ஒட்டைக்கும் யானைக்குங் குதிரைக்குமேயன்றி ஒரு பைசாவேனும் அத்துவைதவித்தையைத் தழைக்கச்செய்ய உபயோகமுற்றதல்ல. மடங்களில் ஒன்றிரண்டு நன்னிலைமையில் இருக்கின்றன. அது மாத்திரம் போதுமா? அதற்கும் நடுவில் ஒருவர் புகுந்து வேலைக்கு ஆரம்பித்தால் ஒன்றும் நடவாது. மடங்களின் நிலை இங்ஙனமிருப்பதால் அதனால் இப்பொழுது ஒருவகையான உபகாரத்தையுமெதிர்பார்க்கமுடியாது. சிற்சிலவிடங்களிற் சிறிய சபைகள் இருக்கின்றனவே, அவைகளிலும் வருஷந்தோறும் அநேக வித்துவான்களை வரவழைத்து வாக்கியார்த்தம் நடத்தி ஏதேனும் இயன்றது உதவி புரிகிறார்களே? போதாதா என்பீர்களோ? அதுவும் சம்பிரதாயமான பரிசீலனையுள்ளவர்களால் இயற்றப்பட்டதாக நாம் அறிய இடமில்லை. அதில் வந்த வித்துவான்களின் திறமையைத்தெரிந்து நடத்தக்கூடிய நல்லோர்கள் வேண்டும்; அப்படியிருந்தாலும், இதனால் ஒன்றும் பிரயோஜனமாகாது, மற்று என்னதான் செய்யவேண்டுமெனில், தக்கதோர் நல்ல பெருங்கூட்டம் ஒன்று வேண்டும். தக்கபடி அத்வைத வித்தையை ஆவலோடு படிக்கத்தகுந்த மகான்கள் வேண்டும், அவ்வித்தை பணத்தால் உயரக்கூடியதல்ல; வேறு தந்திரங்களால் உயரக்கூடியதல்ல; அது மோட்சசாத்திரமாதலால். அவ்வித்தையைக்கற்பதற்கு ஆவல்கொள்ளல் வேண்டும், அத்வைதாபிமானிகளனைவரும் எப்பொழுதாவது ஒரு சபை கூடவேண்டும், அதற்குத் தக்கதோர் மகானை அக்கிராசனம் வகிக்கச்செய்து அச்சபையில் விருத்தியடையத்தக்க பெருமுயற்சிகளைத்தேடி யம்முயற்சி குன்றாவண்ணம் உழைக்கத்தக்க சந்நியாசிகளும் வித்துவான்களும் வெளி வரவேண்டும், அந்தோ காசு சம்பாதிக்கும் வித்தையே பிரம்மவித்தையாய்விட்டது. பிரமவித்தை படித்தால் காசு வருமோ? இதைக்காசுக்காகவா படிக்கிறது? இந்த வித்தை உயரவேண்டுமானால் எல்லோரும் படிக்கவேண்டும், படித்தபடி நடக்கவேண்டும், அனுட்டிப்பதற்கு இது காலமில்லையாயினும் பரோட்சமாயாவது கற்

[illegible]

றுத்தெளிக்தோமாயின் எச்சென்மத்திலாவது நன்னிலையையடைய முடியாதா? நல்ல காலம் வாராதா? நல்லாசான் கிடைக்கானு? நற்கதி பெருேமா? பெறலாம், பெறலாம், அதிற்சிறிதும் ஐயமில்லை. ஆயினும் அந்நிலைமை நமக்கு எப்பொழுது வரப்போகிறது என்று அதை ரியப்பட்டால் நல்வழியிற்செல்வோமாயின் எப்படியும் நற்கதி கிடைக்கும், நம்மவரில் அநேகருக்கு வேதாந்தமென்ருல் வேப்பங்காயைப்போலிருக்கிறது. என் செய்வது காலக்கொடுமையால் அக்கதிநேரிட்டது, நம்மவர் ஓர் பெருத்த சபை உண்டாக்கி அதில் வருஷந்தோறும் தக்க வித்துவான்களை வரவழைத்துப் பரிசு கொடுப்பதாக ஏற்பட்டால் எவ்வளவோ வித்துவான்கள் தோன்றுவர். திருப்பதியில் மத்வமத சபைக்கு எவ்வளவு லெட்சக்கணக்கான தொகை சேர்ந்திருக்கிறது; எவ்வளவு வித்வான்கள் அச்சபையில் பரிசுபெற வருஷந்தோறும் செல்கிருர்கள். அங்கு வரும்படி இல்லாமல் இருக்கட்டும். ஒருவர் அங்கு போவாரா? ஒருநாளும் போகார். ஆயுசு முழுவதும் சம்பாதித்து சரீரத்தை விட்டுப்போகும்போது என்ன கொண்டுபோகப்போகிருேம். ஒன்றுமில்லையெனச்சிறுவனும் சொல்லுவானே. ஆனதால் நம்மவர் சபை காசுக்குக்கூடுவதாக இருக்கலாகாது. சிதம்பரம், மதுரை, அல்லது வேறு பெருத்த தலங்களில் ஸ்மார்த்தபிராமணர்களெல்லோரும் ஒரே கூட்டமாய் கூடி அதில் இதைப்பற்றி யோஜித்து இதற்குத்தக்கதோர் நல்வழியைத்தேடி நமது ஆசிரியன் அனுக்கிரகம்பெற வழிதேட வேண்டும், குருவனுக்கிரகமின்றி ஒன்றும்பெறமாட்டோம் ஆனதால் அவனருளைப்பெற்று அவன்மொழியைப் பரிபாலனஞ்செய்யவேண்டும். அதற்கு முயற்சிசெய்யவேண்டும். இதுவே தருணம், இச்சமயந் தவறினல் வேறு சமயங் கிட்டாது; இச்சமயம் அனேகர் புறபாஷை வழியாக வேதாந்தவிசாரஞ்சிறிதுபடித்திருக்கிருர்கள். இச்சமயம் ஒன்று கூட்டினல் எல்லோரும் கூடுவார்கள். எவ்வகையிலும் இவித்தை வளர ஓர் சபையும் தக்கதோர் பாடசாலையும் வேண்டும், ஆனதால் சந்நியாசிகளே, உபந்நியாசிகளே கற்றவர்களே மற்றவர்களே எல்லோரும் வாருங்கள் வாருங்கள் இந்நற்காரியத்தில் முயலுங்கள் எனது கடமையைமுடித்தேன். பொம் பொம். பொம்.

ஆஸ்திகதூதன்.

ஸம்ஸாரஸ்யாஸ்ய
ஸ்த்ரீஸ்வாதந்த்ர்யஞ்ச

[illegible]

ஈசுவர சிருட்டியும் பெண்பாலின்சுதந்தரமும்.

ஆரியர்காள்! கடவுளால் அமைக்கப்பட்ட இவ்வவனியில் சீவகோடிகளுக்கு இயற்கையாய் அமைந்த ஆண்பால் பெண்பால் இரண்டில் எதற்குச் சுதந்தரம் உண்டென விசாரிப்பாம்.

ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, நடப்பன என்ற இவ்வகைகளில் உள்ள இருபால்களில் கடவுளாலேயே எவைக்குச் சுதந்தரத்துவம் அமைக்கப்பட்டிருக்கிறது? ஒவ்வொரு ஜந்துக்களிலும் ஆண் பெண் இரண்டு வகையுண்டு. இவ்விரண்டினமும் ஒன்றுகூடினாலன்றி அதன் இனம் வளராதென உலகமறிந்தவிஷயம். அப்படியிருக்க, ஒன்றைப்பார்க்கிலும் ஒன்றிற்குச் சுதந்திக்குறைவு வரக்காரணமென்ன? என்றால், அதுதான் ஈசுவரசிருட்டியின் விசித்திரம். எதனிடத்தில் பௌருஷமும், தைரியமும் வீரியமும் பெருந்தன்மையும் தங்கியிருக்கிறதெனில், முக்கியமாக ஆண்பாலிற்றான். ஒரு வஸ்துவை நாம் கண்ணுற் பார்ப்பதினாலேயே இது இத்தன்மையது என அறிந்து கொள்ளலாமல்லவா? ஊர்வன இனத்தில் எறும்பைப்பார்ப்போம். எறும்பில் ஆண் சிவந்ததாகவும் முகத்தில் மீசையைப்போன்ற இரண்டு புள்ளியுடையதாகவும் மிக்க வீரியம் உடையதுபோல் பல எறும்புகளின் நடுவில் அனைத்தையும் ஆள்வதாகவும் மற்ற அனேக வீரியமுள்ள குணங்கள் உடையதாகவும் காணப்படுகிறது. அதையே ஆண் எறும்பென அனேக சாஸ்திரிகள் எண்ணுகிறார்கள். பெண் எறும்போ மிகக்கறுத்ததாயும் சிறியதாயும் கடித்தால் அதிக வீரியமில்லாததாயும் இருக்கிறது. இவ்விதமே எறும்பிலுள்ள ஒவ்வொரு இனத்திலும் ஆண் பெண் இரண்டு வகுக்கப்பட்டிருக்கிறது. ஆண் கடித்தால் மிக்க வலியாயிருக்கிறது. பிறகு பாம்பைப் பார்ப்போமாயின் அதனிடத்தில் பெண் பாம்பு சாரை, ஆண் நாகம் எனத்தெரிகிறது. பெண்ணாகிய சாரை கடித்தாலும் அதிக இம்சையில்லை; அது பார்வைக்குப் பெருத்ததாய் இருந்தாலும் அதிக விஷமுடையதல்ல. ஆணாகிய நாகபாம்பிற்கோ இருக்கும் விஷத்தைக் கணக்கிட்டு முடியுமா? அந்தோ! அது கடித்து மீள்பவருண்டா? அதன் ரூபத்தைப்பார்த்தால் ஓர் பயங்கரமாயிருக்குமே? அது தன் படத்தை விரித்துச் சீறுமாயின் எவ்வளவு தூரம் சத்தங்கேட்கிறது. அதற்கு அமைந்திருக்கும் அங்கங்களை

[illegible]

கவனிப்போமானல் எவ்வளவு பயத்தையும் அதைரியத்தையுங் கொடுக்கிறது. சாரையும் சர்ப்பமும் இணையும்போது எந்த ஜந்துவாலாவது அதற்கு இம்சையுண்டாய்விட்டால் எது துள்ளிக்குதித்து அந்த ஜந்துவை இம்சிப்பதெனில், நாகமே. மற்றும் சாரை வெகுநாள் சீவித்திராது. நாகமோ எவ்வளவோ நாள் உயிர் பெற்றிறகும் முளைக்கக்கூடிய தன்மையை யுடைத்தானது. ஆனதால் இதில் எவ்வினத்திற்குச் சுதந்தரம் ஜாஸ்தியெனில், ஆணினத்திற்கேயாம். மற்றும் மிருகத்தினிடத்தில் எந்த மிருகத்திலும் ஆணுக்குள்ள சுதந்தரம் பெண்ணுக்கில்லை. பசுவினிடத்தில் பால் கறக்குந்தன்மையும், அடங்கியிருக்கும் குணமும், சாதுத்தன்மையும் பொருந்தியிருக்கிறது. காளேயோ மிக்க தைரியமுடையதாயும், முதுகில் மிக்க அழகிய திமிர் அடங்கியமுண்டு உடையதாயும், மிக்கபலமுடையதாயும், அநேகரிருக்கும் வண்டியை வெகுதூர மிழுக்கக் கூடியதாயும் மிக்க கோபமுடையதாயு மிருக்கிறது. இந்தச் சிறப்பைப் பசுவின் கிடைகளிலுள்ள காளைகளை நோக்கினல் தெரியும். கிடைகளிற்காளையைக்கண்ட பசுக்கள் நடுங்கிப் பதுங்கி யொதுங்கிச் செல்கின்றது. குதிரையிலும் பெண் குதிரையைப்பார்க்கிலும் ஆண் குதிரைக்குத்தைரியமும் வீரியமும் ஜாஸ்திதான். மான் இனத்திலும் பெண்மானுக்குக்கொம்பில்லாமல் மொட்டையாய் இருக்கிறது. அதற்கு அதிகமாகப்பலமும் குறைவே. ஆணே பலமுள்ள கொம்புடையதாயும், பெருத்த மான் கூட்டங்களில் முதலிற்சென்று, வரும் அபாயங்களைக்காக்கக்கூடியதாயும், கோபமும் வீரியமும் பொருந்தியதாயும் இருக்கிறது. மற்றும், காட்டிலும் நாட்டிலும் உள்ள ஒவ்வொருமிருகவினத்திலும் ஆணே மிக்க சுதந்தரமுடையதாய் இருக்கிறது. பொதுவாக யானையைப்பார்ப்போம்; யானைக்கூட்டங்களில் ஆண் யானைகளை முன்னல் விட்டுப் பிறகு பெண் யானைகள் போவது வழக்கமாம். எவ்வித ஆபத்துக்கள்வரினும் அனைத்தையுங் காப்பது ஆண் யானையே. அதற்குச் சுதந்தரம் மிகுதியெனத் தெரிவதற்காகவே இரண்டு பெருத்த கொம்புகள் அமைந்திருக்கின்றன. சிங்கத்திலும் பெண் சிங்கத்தைப்பார்க்கிலும் ஆண் சிங்கத்திற்குப் பிடரியில் மயிரும், கொழுத்த புஜமும், கூர்மையுள்ள நகமும், முகத்தில் கடுத்த நோக்கமும், மிக்க தைரியமும் மிக்க பலமும் அமைந்திருக்கின்றன. அவ்வினத்திலும் பெண் இனத்தை அடக்கியாளுந் திறம் வாய்ந்தவைகளு மிருக்கின்றனவெனப் பலரால் கேள்

[illegible]

விப்பட்டிருக்கிறோம். மிருகவினம் அப்படியிருக்கப் பக்ஷிகளைப்பார்ப்போம். பாருங்கள். குருவி, முதல் கழுகு, வரையில் எவ்வினத்திற்கு வீரியமுந் தைரியமும் மிகுதி. சிட்டுக் குருவி நாணத்தான் குருவி கருங்குருவி முதலியவைகளில் ஒவ்வொன்றுகளிருக்குமாச்சரியத்தை யென்னென்று சொலலுவோம்! அனேகவினத்தில் பெண் குருவியைக் கூட்டிலேயே வைத்துவிட்டு ஆண்கள் மாத்திரம் வெளியில் கிளம்பி வேண்டிய ஆகாரங்களைத் தேடிப் பெண்ணிற்கும் கொடுத்து இரவுவரை சுகித்திருந்து காலையிலெழுந்து வெளிவருகிறது. அனேக குருவிகள் ஆணும் பெண்ணுமிணைபிரியாது சென்று எங்கு சென்றாலுஞ் சேர்ந்தேபறந்து சேர்ந்தே ஆகாரந்தேடிப் பிறகு தன்னிடத்திற்குச் செல்கிறது. அதில் ஆண்குருவியிடத்தில் பெண் மிக்க அடக்கத்துடனும் பக்தியுடனுமிருக்கிறது. நாகணவாய்ப்புள்ளுமப்படியே. காக்கையானது தனது பெண் குஞ்சு பொரிக்கும் காலத்தில் தானொன்றே வெளியில்சென்று தானு மாகாரம் புசித்துக் கொண்டு தன் குஞ்சுக்கும் தன் பெண்ணினத்துக்கும் வேண்டியவைகளைத் தேடிக்கொண்டு தன்கூட்டிற்குச் செல்கிறது. மற்றுங் கெருடன், கழுகு, பருந்து, முதலிய பெரும் பறவைகளிலும் ஆணுக்கமைந்திருக்கிற சுதந்தாத்துவம் பெண்ணுக்கமையவில்லை. மற்றுங் கோழியினிடத்தில் சேவலுக் கமைந்திருக்கும் அழகுந் தைரியமும் பெட்டைக்கில்லை. பெட்டை முட்டையிடவும் அதைப் பொதிக்கவுந்தானறியும். மேற்றும் மயிலில் ஆண்மயில்தான் அழகுஞ் சுதந்தரமும் தைரியமும் வீரியமும் பொருந்தியது. ஒவ்வொன்றிலும் ஆணுக்கே சுதந்தரத்துவம் அமைந்திருக்கிறது. மனுஷரிலுமென்ன புருஷனுக்கே பெருந்தன்மையும் தைரியமுங் கொழுப்புடைய தோள்களும் ஆண்மையுடைய முகக்குறியும் விசாலமான மார்பும் அடக்கியாளுஞ்சக்தியும் மிகப் பெலமுள்ள கால்களும் கைகளும் இடுப்பும் அனேக பலமான வேலைகளைச் செய்யத்தக்க முயற்சியுமிருக்கிறது. ஒரு புருஷன். மிக்க போஷணையும் மனோ உற்சாகமும் மிக்க தைரியமுமுடையவனாயிருந்தாலெவ்வளவோ ஸ்திரீகளைப் புணருவான். அவ்வளவுபேருக்குங் கெற்பமுண்டாக்கத் தக்க வன்மையுடையவனுமாவான். ஒரு புருஷனுக்கு எவ்வளவு போஷணையும் மனோ உற்சாகமும் மிகுதியோ அவ்வளவுக்கு வீரியமும் தைரியமும் பலமுமுண்டாகிறது. ஒரு தைரியமுள்ள புருஷனால் பல ஸ்தி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ரீகள் காக்கப்படுவோர்கள். ஒரு தைரியமுள்ள புருஷனே எவ்வளவு பெருத்த காரியத்தையும் மிக்க சுலபமாய் முடிக்கக்கூடும். உலகவழக்கும் "ஆண்மையுடையவன்" என்று வழங்குகிறது. ஸ்திரீகளோ அத்தன்மையுடையவர்களல்ல; அவர்கட்கு வீரியங்களிருக்க இடமில்லை. புருஷன் வேண்டுமானால் பிந்துவை வெளிவிடாத பெலவானாய் இருக்கலாம்; ஸ்திரீகள் அங்ஙனமிருக்கமுடியாது. அவர்கட்கு மாதவிடாயினால் தேகக்கட்டுக் குலைந்து விடுகிறது. கர்ப்பத்தாற் பலங்குறைய நேரிடுகிறது, கர்ப்பம் வெளிச்செல்வதாற் பலங்குறைய நேரிடுகிறது; ஒரு ஸ்திரீயால் பல புருஷர்களின் இச்சையை அடக்கமுடியாது. ஒரு புருஷனாற் பல ஸ்திரீகளின் இச்சையைத் தணிக்கமுடியும். மற்றும் அவர்கள் அவயவங்களைப்பார்ப்போமாயின், பெண்களின் மார்பு புஷ்டியுடையதா? அவர்கள் தோள் பலமுடையதா? அவர்கள் இடை பலமுடையதா? அவர்கள் கை பலமுடையதா? என்ன பலமுள்ளவளாய் இருந்தாலும் மாதத்திற்கொருமுறை வெளிவரும் சுரோணிதத்தாலும் கர்ப்பம் வெளிவருவதாலும் அவர்கள் பலங்குறைந்துவிடத் தடையென்ன? மற்றும் மனோதைரியமுடையவர்களா? பார்ப்போம்! இல்லை, இல்லை; புருஷன் இருந்தாற்றான் அவர்கள் தைரியமாய் இருப்பார்கள். புருஷனில்லாவிடில் அவர்கள் பாடு அந்தரந்தான். ஆனதால் ஸ்திரீகளைப்பார்க்கிலும் புருஷர்களுக்குச் சுதந்தரமும் தைரியமும், வீரியமும், அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத்தக்க அவயவங்களும் மற்றொன்றை யடக்கியாளுந்தன்மையும் பிந்துவைக்கொடுத்துக் கர்ப்பத்தை உண்டாக்குந்தன்மையும் அவ்வியாஜகருணாமூர்த்தியான எம்மிறைவனால் அமைக்கப்பட்டிருக்கின்றனவன்றி, பெண்ணினத்திற்கு அவ்வளவில்லையென்பது தெற்றெனப்புலப்படுகிறது.

ஆஸ்திகதூதன்.

யாஜுஷோபாகர்ம நிர்ணயம்.

இக்காலத்து யாஜுஷர்கள் வாஜஸநேயிகளென்றும் தைத்திரீயர்களென்றும் இரு பிரிவினராயிருக்கின்றார்கள். அவர்களுள் வாஜஸநேயிகளென்னும் சுக்லயஜுர்வேதிகள் பாரஸ்கராசாரியரியற்றிய கிருஹ்யத்தை யனுசரித்துக் கன்மங்களை யனுஷ்டித்துவருகிறார்கள். அக்கிருஹ்யத்தில் அவர்கட்குச் சிராவண காலம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. "ஒஷதிகளுண்டானவுடன் சிராவண நக்ஷத்திரத்தோடு கூடிய சிராவணி பூர்ணிமையிலாவது, ஹஸ்த நக்ஷத்திரத்தோடு கூடிய

श्रावण्यां पौर्णमास्यामाषाढ्यां वोपाकृत्य इति हस्तनक्षत्रे [illegible] श्रावण्यां पौर्णमास्यां क्रियेतां वाषाढ्यामिति यथासूत्रमुपाकर्म बोधायनः - अथ सत्याषाढीयानाम् अथोपाकरणोत्सर्जने व्याख्यास्यामः। श्रावणपक्ष ओषधीषु जातासु हस्तेन पौर्णमास्यां वाध्यायोपाकर्मेति भगवान् सत्याषाढः। तद्व्याख्यायाम् [illegible]। श्रावण्याः पौर्णमास्याः पक्षः श्रावणपक्षः [illegible] श्रावणपूर्वपक्ष इत्यर्थः। तस्मिन् पक्षे ओषधीषु जातास्वोषधीषु हस्तेन पौर्णमास्यां वा श्रावण्यां जातास्वोषधीष्विति [illegible] अथवा जातास्वेव [illegible] इति। [illegible] श्रावणमास हस्तर्क्षं [illegible] श्रावणी [illegible] इति [illegible]। [illegible] सत्याषाढीयवदेव। [illegible] श्रावणं [illegible] श्रावण्यां [illegible] श्रावण्यामेव [illegible]।

[illegible]।

சிராவண பஞ்சமியிலாவது உபாகரணஞ் செய்யவேண்டும். இங்கு சிராவண பூர்ணிமையும், சிராவணபஞ்சமியும் வரிசையாய் சிரவண ஹஸ்த நக்ஷத்திரங்களுடன் கூடியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவைகளுபாகரணகாலமாமெனப்பாஷ்யகர்த்தர்சொன்னர். தைத்திரீயர்களென்னும் கிருஷ்ணயஜுர்வேதிகளோ ஒருவகைப்பட்டவர்களல்லர். ஆனல் அறுவகைப்பட்டவர்கள். அவர்கள் போதாயனர், ஸத்தியாஷாடர், பரத்துவாஜர், ஆபஸ்தம்பர், அக்கினிவேச்யர், வைகானஸர் இவர்களாற்செய்யப்பட்ட கிருஹ்யத்தின்படி கன்மங்களையனுட்டித்துவருகிருர்கள். அவர்களுக்குச்சிராவணகாலம் வெவ்வேருகஅவரவர் கிருஹ்யத்தில் காணப்படுகிறது. எங்ஙனமெனின், ''சிராவணபூர்ணிமையிலாவது ஆஷாடபூர்ணிமையிலாவது உபாகரணம் செய்து'' என்று தருமசூத்திரத்திலும், உபாகருமத்தைச் சிராவணபூர்ணிமாவிலாவது ஆஷாடியிலாவது செய்யவேண்டுமென கிருஹ்யசூத்திரத்திலும், போதாயன மகரிஷி அந்த ஸூத்திரிகளுக்குக் காலத்தை விதித்தனர். சத்தியாஷாடிகளுக்கு உபாகரணேத்ஸர்ஜனங்களை வியாக்கியானஞ்செய்கிறேம். சிரவணபக்ஷத்தில் ஓஷதிகளுண்டானபிறகு ஹஸ்த நக்ஷத்திரங்கூடின தினத்திலாவது பூர்ணிமையிலாவது அத்தியாயோபாகருமஞ் செய்யவேண்டும் என ஸத்தியாஷாடபகவான் விதித்தனர். அதன் வியாக்கியானத்தில்—சிரவணபக்ஷமென்பதற்குச்சிராவணபூர்வபக்ஷமென்பது பொருள். அதில் மழை பொழிந்து ஓஷதிகளுண்டானபிறகு ஹஸ்தத்திலாவது பூர்ணிமையிலாவது உபாகரணஞ்செய்யவேண்டும். ஓஷதிகளுண்டானவுடன் என்பதினுல் காலத்திற்குச் சம்சயம் நேர்ந்தபோது குறிகளைக்கொண்டு தீர்மானிக்கவேண்டும். அல்லது உண்டான பிறகு தான் இந்தக்காலத்திற்கு முந்தியோ பிந்தியோ செய்ய வேண்டும் என்றதினுல், பாத்திரபதத்திலாவது ஆஷாடத்திலாவது செய்யலாமென்பது கருத்து என்று ஸூத்திருதத்தர் கூறினர். இங்ஙனம் ஸூத்திரகர்த்தாவும் பாஷ்யகர்த்தாவுங்கூறியவாறு சிராவணமாஸ ஹஸ்தநக்ஷத்திரம் முதற்காலமென்றும் சிராவணி இரண்டாவதென்றும் ப்ரௌஷ்டபதி மூன்றுவதென்றும், ஆஷாடி நான்காவதென்றும் ஏற்படுகிறது. பாரத்துவாஜசூத்திரிகளுக்கு ஸத்தியாஷாடிகளுக்குப்போலவே இதே வசனம் அந்த சூத்திரத்திலு மிருக்கிறபடியால் அக்கினிவேச்ய ஸூத்திரிகளுக்கு ஆபஸ்தம்பிகளுக்குப்போலவே வைகானஸகிருஹ்யத்தில் இரண்டுசிராவணஞ்சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளிலொன்று ஆஷாடத்திலும், மற்றென்று சிராவணியிலும். முதற்காலத்திற்குச் சாகாதீசனுடைய சக்தியில்லாமை முதலிய தோஷம் நேர்ந்தால் இரண்டு சிராவணமும் சிராவணியிலேயே செய்யவேண்டும். அதற்கும் தோஷம் வந்தால் பாத்திரபதத்திற்செய்யவேண்டும்.

வரும்

உபநிடதங்களும் ரௌரவசித்தாந்திகளும்

தொடர்பு

ஸ்ரீகண்ட சிவாசாரியசுவாமிகள் உபநிஷத்துகளுக்குத் தனித்தனிப் பாஷ்யமியற்றினரில்லையாயினும் எல்லாவுபநிஷத்துகளுக்கும் சங்கிரஹமாய் 'உபநிஷத்விருத்தியென்ற' ஓர் புஸ்தகத்தை இயற்றியுளாரென்பதும் போதாயனமாமுனிவரும் அங்ஙனமே செய்துளாரென்பதும் அப் புத்தகங்கள் தெலுங்கு நாட்டகத்து ஆராத்திய பண்டிதர்களிடத்து இப்பாஷியத்துடனே வழங்கி வரப்படுகின்றனவெனவுமிவரறியாராகையால் ப்ரம்மஸ்ரீ பத்திராதிபரவர்கள் எழுதியதற்குச் சூத்திரபாஷியமெனப் பொருள்கொண்டு இடர்பட்டார். இதனிடையே ப்ரம்மஸ்ரீ பத்திராதிபரவர்கட்கு இவர்பட்டும் படாமையதுமெழுதுவதில் மிகச் சாதுர்யரெனப் பட்டமளித்தார். இவரிடத்து எமதாசிரியருக்கு இவர் பட்டம் வேண்டுவதில்லை. அவர்கட்கு அரசர்களும் பண்டிதர்களும் கொடுத்த பட்டமே போதுமானது. அதுதானவரீக்கெற்றிற்கு? அவர் வடமொழியிலுந் தென்மொழியிலுமெழுதிக் கன்மகாண்டத்திலும், ஞானகாண்டத்திலும், வெளியிட்ட பல்நூல்களே அவருக்கழியாப்புகழா யிருக்கின்றன. நிற்க. மேலே 'யதாவஸ்துவஸ' என்றவாக்கியத்தில் சுவேதாசுவதர உபநிடதத்தில் 'ஶிவ' வென்ற சொல்லுக்கு 'தெவ' வென்றசொல்லை மாற்றி அதற்குப்பாஷியம் வகுத்தருளிய சங்கரர் ஏதோ மாற்றிப் பொருள் கொண்டாரென எழுதி இம்மஹா ரௌரவ சித்தாந்த சேகர பரம உபசங்காரத்தை ஒருவரித்த உபன்னியாசத்தால் சில சன்னியாசி தூஷணமங்களாசரணத்துடன் முடிக்கின்றார். அதனில் சுவேதாசுவதரப் புரட்டைப்பற்றி இவரெழுதியது விகத்தவறு. எமது ஆசிரியர் அவ்வுபநிடத பாஷியமியற்றியவர். ஜகத்குருநாதனல்லவெனத் தீர்மானித்திருத்தலாலென்க. ஸ்ரீகண்ட சிவாசாரிய சுவாமிகள் சிவசப்தத்துடன் சேர்த்தே அவ்வசனத்தையெடுத்தார். அங்ஙனமே பலவுபநிடதங்களுக்குப் பாஷியமியற்றியருளிய ஆசிரியர் சங்கரானந்தமுனிகளும் அதற்கு சிவசப்தத்துடனே பாஷியமளித்தனர். ஆதலின் அவ்வாதத்தை யாம் பொருட்படுத்தவேண்டுவதில்லை. இனி யிவருக்கு ஜகத்குருசுவாமிகளியற்றிய கீதா பாஷியாதிகளில் நம்பிக்கை குறைந்ததும் சென்ற எவிளம்பி௵ ஆவணி௴ 8௳ விவேகதிவாகரன் பத்திரிகையில் இவரது உபன்னியாசத்தைக் கடையிற்செலுத்தி அதன்முடிமேலேற்றப்பட்ட மற்றொருபன்னியாசத்தில் கூடிய சீக்கிரம் வெளிவருவதாக (இதுவரையில் வெளிவரக்காணோம்.) இவரைப்போன்ற புதிய சைவரை உத்தேசித்து அரக்கோணவாசியார் அருளிச்செய்தபடிருகீதாச்சோமசுந்தரநாயகர்கீதார்த்ததீபிகையைக் கண்டபிற்குறைதயினுஞ். சில செய்யுட்கள் அத்துவைதிகளாற் கற்பிதமென்று இவர் சொல்லவந்தாலும் வருவார். அச்சமயம் அவ்விஷயத்தைப்பார்ப்போம். இச்செந்தமிழ் வழங்கும் செந்நாதையர் திருவாதியென்று வழங்கிய திருவையாற்றில் ப்ரம்மஸ்ரீ அனந்த வைத்தியநாதசிவனவர்கள் வெளியிட்ட புத்தகத்தில் உபதேச காண்டத்தில் ஒரே புத்தகத்தில் ஐந்து அத்தியாயங்கள் அதிகமிருந்ததாகவும் அதனைக் கண்டபடி அச்சிட்டோமெனக் குறித்திருந்தால் அப்புத்தகமொழிய மற்றைய புத்தகங்களில் சைவவிரோதிகளால் எடுத்தொழிக்கப்பட்டனவென இவரனுமானிக்கின்றாராம். இவர் நீண்டகாலம் காசி வாசஞ்செய்ததற்குப் பயன் இவ்வனுமானம்போலும் மற்றொருவன் இவ்வொருகவடியில் ஏதோ ஒருகுருக்கள் சிலவற்றையெழுதிக் கோத்திருக்கலாமெனவூகித்தால் அதை எவ்வாறு மறுப்பரோ அறியேம். மேலே ஏதோஅனுமந்தகட்டத்தில் வசிக்குமொரு சன்னியாசியார் சோளஸ்தல புராணமொன்றைச் செய்தாரெனவெழுதுகிறார். கோடி கோடியாய்க் குருக்கண்மார் சைவஸ்தல புராணங்களை எழுதிவைத்திருப்பதை இவர் கண்டாரில்லைபோலும். நிற்க. வடவெழுத்தென்பது இன்னவிடமென்றுமறியாத ஆரியனாரெனச் சென்னை ஆரியனாரை இவர் குறிப்பது பிறவிக்குருடன் "ஒற்றைக்கண்ணனைப் பொட்டையா"வென விளித்தாப்போலிருக்கின்றது. இவர் வைதிக பாசுபதத்தை நிரூபிப்போமென வெளிவந்து எத்தனை தலபுராணங்களிற்தமொழி விழுந்தாரென்பதை இவர் மயக்கத்தை விளக்கி யச்சிட்டு வெளியிடப்பட்ட பலவகைப் புஸ்தகங்களைப் படித்தவர் யார்தானறியார். இவருக்குப் பிடித்ததெல்லாம் இரும்பு கடித்ததெல்லாம் கரும்பென அவரைத் தூற்றுகின்றார். சிவ சிவ! இவருக்குப் பிடித்ததெல்லாம் இரும்பாகிறதோ ஏதோ அறியேம். மேலே அவரை அறிவீனர் என்பதைப்பற்றி நாம்விசனமுறவில்லை; இவருக்குப் பிறரை வைதல் சுபாவமாதலால். மேலும், அச்சங்கியாசியார், ஹரதத்தாசாரியார் அருளிச்செய்த சுருதிசூக்திமாலிகையிற் சில சுலோகங்களை மாற்றிவிடுவதாகப்பயந்து அங்ஙனம் மாற்றிவிட்டால் பகவத்பாதசுவாமிகள் அபிப்பிராயமும், ஹரதத்தசுவாமிகள் அபிப்பிராயமும் ஒன்றாய்ப்போமேயென்று மிகப்பரிதபிக்கின்றார். ஒன்றாயினும் ஆகாதுபோயினும் அஃதெல்லாம் இவர் கொண்ட கொள்கைக்கு முற்றும் விரோதமென்பதைப்பற்றி முன்னர் விரிவாய் நிரூபித்தோமாதலால் அவற்றிற்குச் சமாதானம் சொல்ல வேண்டுவது இவ்வையர் தலைச்சுமையாமென்க. அச்சந்நியாசியார் ஆத்மார்ப்பணஸ்துதிக்கு வியாக்கியானஞ்செய்கின்றாரென்று மாயாவாதவியாக்கியானம் செய்து சைவராகிய தீக்ஷிதயோகியாரை மாயாவாதியாக்கப்பார்க்கின்றார் என அஞ்சுகிறார். இதனைச் சற்று விசாரிப்போமாக: சிவதத்துவவிவேகத்தில் இவர் கொண்ட சித்தாந்தசாத்திரங்களை அவைதிகமென்றும் வேதபாஹியமென்றும் வகுத்தருளிய தீக்ஷிதேந்திரரோ சைவர்?

2 ரத்தினத்திரயபரீக்ஷையில் இவர்கொண்ட "சகுணோபாஸ்தி நிர்க்குணத்திற்குக் கீழ்" என்ற தீக்ஷிதரொத்தினமோ சைவர்?

3 பஞ்சரொத்தினஸ்தவத்தில் வேதவியாசமுனிவர்கோமான் வசனப்பிரமாணங்கொண்டு அம்புலிசூடிய எம்பிரானை பிறப்பிலியென நாட்டிய புண்ணியசீலரோ சைவர்?

4 சிவார்க்கமணி தீபிகையில் கேவலநிமித்தகாரணவாதத்தை முற்றுந்தொலைத்த முற்றறிவாளரோ சைவர்?

5 பரிமளம் வகுத்த பரமாசாரியரோ சைவர்?

6 விதிரஸாயனம் விதித்தருளிய வைதிகரோ சைவர்?

7 சித்தாந்தலேசசங்கிரகத்தில் நானாஜீவவாதத்தை நாசஞ்செய்த குருநாதரோ சைவர்?

8 சிவாத்துவைதநிர்ணயத்தில் ஸ்ரீகண்டபாஷ்யத்தை முற்றும் அத்வைதபாஷ்யத்திற்கிணங்கப் பொருள் படுத்திய பெரியாரோ சைவர்?

9 உபக்கிரமபராக்கிரமத்தில் உயர் வேதாந்தப்பொருள் நிலைநாட்டின உத்தமரோ சைவர்?

10 இடையறாது வைதிகதீக்ஷாசம்பன்னராய், பல்வகை அக்னிஷ்டோமாதி யாகங்களைச்செய்த மகானுபாவரோ சைவர்?

11 வைதிக தீக்ஷையின்றித் தாந்திரிகதீக்ஷையைக் கனவிலும் காணாத சற்றோர் சிகாமணியோ சைவர்?

12 பிரம்மானந்தமுனிவர்முதலிய வேதாந்திகளால் அத்வைதவித்தியாபரமாசாரியரெனப்புகழப்பட்டவரோசைவர்?

13 அந்தோ! இவ்வையருக்கு முந்தி எந்தத் தாந்திரிகசைவர்தாம் தீட்சிதரவர்களைச்சைவரொனவழங்க இவர்கண்டார்?

14 மெய்கண்டதேவர் அருணந்திசிவம் உமாபதிசிவமுதல் முக்களாலிங்கப்புலவர் ஈறாக இவர் மூதாசிரியர் எங்கேனும் எம்மரிய தீட்சிதமூர்த்திகளைச் சைவரென வழங்க இவர் கண்டனரோ?

15 அந்தோ! அவர், இவர் கொண்ட ஆத்மநாஸ்திக்கியவாதம் கேவலநிமித்தவாதம், அவைதிகவாதம், சூன்னியவாதம், மாயாவாத முதலிய துர்வாதங்களை முற்றுமகற்றிச் சுட்டெரித்திருப்பதை இவர் கண்டாரில்லைப்போலும்! சிவ சிவ! ஐயருக்குக்கண்டதெல்லாங்காட்சி, கொண்டதெல்லாம் கோலம்; வெளுத்ததெல்லாம் பால் என்ற மயக்கத்தால், காட்டுத்தீயை அசோக மரத்தின் செந்தளிரென மயங்கி அதனிடத்தத்தன் நாசியைச்செலுத்திய குயிலைப்போல் திருநீறு திருக்கண்மணிமாலைமுதலிய பஞ்ச சிவசின்னங்களைக்கண்டு சைவரென மயங்கித் தியங்கினர். இவர்தாம் வடவெழுத்துக்களின் நிறமறிந்தவராம், ஆரியருக்கு அந்நிறந்தெரியாதாம், இவர் வடவெழுத்துக்குத்தானா நிறமறிவார், வடவெழுத்து, தென்னெழுத்து, கீழெழுத்து, மேலெழுத்து, விண்ணெழுத்து, கண்ணெழுத்து எல்லா எழுத்துக்களுக்கும் இடையே, மண்ணெழுத்துக்கும் நிறமறிவார்போலும்! இவரைப்போல் எழுத்துக்கு நிறமறிவாரும் அக்கியின் சுவையறிவாரும் ஆகாயத்தின் நிகழ்ச்சியறிவாரும் வாயுவின் நாற்றமறிவாரும் தண்ணீரின் வெப்பமறிவாரும, நிலத்தின் நித்திய நெகிழ்ச்சியறிவாரும் சில நண்ணறிவாளரோ இருக்கக்கூடும். இவ்விதம் வடவெழுத்துச் செந்நிறம் தென்னெழுத்து வெண்ணிறம் ஆங்கிலவெழுத்து அதினும் மேலானநிறம் என்று அறிந்து அப்பயதீட்சிதா சைவர், ஹரதத்தர் ஆகமிகர், ஸ்ரீகண்டசிவாசாரியர் அவைதிகர் என்ற உண்மை தெளிந்து, ஆரியங்கடந்து அம்புதி தாண்டி, அரக்கர் நாட்டில் அநாதிகாலந்தொடங்கி, அவிச்சின்னமாய் நிலைபெற்றுவரும் அற்புதசைவபரம்பராசாரியர் ஒருவர் தம்மைப்போல் இங்கு அவதரிக்காக்குற்றந்தானும், இவ்வாரியமகாதேசத்திற்கு வந்த பெருங்கேடுதெயென (இப்படிப்பட்ட கேடுதிகள் சைவாசாரியபரம்பரை, சிவாத்வைத உண்மை போதிப்பார் இக்காலத்து இல்லாதொழிந்தமையாலும் என்று மிகப்பரிதாபமாய்ச்சொல்லுகிறார். அன்று ஒரு ஹரதத்தர், இன்று வலிய கலியுக ஹரதத்தர், இளைய கலியுக ஹரதத்தர் இருவராயிற்றே, அன்று நீலகண்டரொன்ற ஓர் சிவாசாரியர், இன்று அருணந்திசிவாசாரியர்முதல் இவர்திருக்கூட்டத்தில் ஒருவரான சத்தியோஜாத சிவாசாரியர் ஈறாகப்பல சிவாசாரியர்கள் உண்டே. அன்று ஒரு தீட்சிதர், இன்று இவரால் தீட்சிதப்பட்டம் வைத்து அழைக்கப்பட்ட குருக்கண்மார் கணக்கில் அகப்படுவாரோ? கோப்பாய் சபாபதிநாவலர், ஞானி சோமசுந்தரநாயகர், காலஞ்சென்ற சாமக்குளத்துத்தாசர், இவ்வையர், பச்சையாம்பேட்டைக் குருக்கள்முதலிய பல படைத்தலைவர்களோடு பல பல சைவாசாரியசேனைகள் ஆரியங்கற்றஅந்தணரில்லாவிடத்து இடத்துக்குத்தக்கவாறு ஆசாரியத்தன்மையையடைய முயன்று வருவதை இவரோன் மறந்தார்- காசியில் சென்றால் தென்மொழிப்புலமையும், ஈழத்திற்சென்றால் வடமொழித்திறமையும்காட்டும் இப்பண்டிதர் புலி "யத்ர வைதிகாஸ்தத்ர லௌகிகா: யத்ர லௌகிகாஸ்தத்ர வைதிகா:" எங்கு வைதிகர் அங்கு லௌகிகர், எங்கு லௌகிகர் அங்கு வைதிகர்" என்றபடி இவர் சாதுரியம் மிக வியக்கத்தக்கதே. அதுமட்டோ! அத்தீட்சிதயோகியாரும் நீலகண்டசிவாசாரியருமஹரதத்தாசாரியாரும் எழுதிய கிரந்தங்களைப் படித்து உள்ளபடி விஷயத்தை வாங்கிக்கொள்ளுஞ் சக்தி இல்லாமையாலும் என்று காசிச்சந்நியாசியும் ப்ரம்மவித்தியா பத்திராதிபரும் வேதாந்தத்தையும் ஸ்ரீகண்டசிவாசாரியர் சித்தாந்தத்தையும் ஒன்றுபடுத்திப்பெயரொன்றைமட்டும் சிவாத்வைதமென வைத்து உலகத்தை ஏய்க்கப்பார்க்கிறார்கள் என்கின்றார். நியாயந்தானே

வரும்

ப்ரம்மவித்தியா

வர்த்தமானம்

[illegible] 'தேவனைநம்பித்தேற்றமடைவாய்' என்றபடி பரங்கருணைத்தடங்கடலாகிய ஜகதீசனை எப்போதும் தேவ தேவ மகாதேவ என்று துதித்து முக்திபெற்றவர்கள் அநேகருண்டு. நமக்கும் முக்தி வேண்டுமொனால் பரமேசுவரனைப்பஜிக்கவேண்டும். அவனைப் பக்தியுடன் சதா பஜித்து இப்பிறவிக்கடலைக்கடக்க நாமெல்லாம் வழி தேடுவோமாக.

*
* *

[illegible] 'லோகவாழ்வில் மோகங்கொள்ளேல்' என்றபடி இவ்வுலகவாழ்க்கையைச் சாசுவதமென மதித்தல் அந்தோ! விபரீதமன்றோ? கொட்டாவி விட்டார் உயிர் விட்டார் என்றும், நேற்று இருந்தான் இன்று இறந்தான் என்றும் கேள்விப்படுகிறோம். நாம் வெகு சிரமப்பட்டுத் தேடிச் சம்பாதிக்கும் பொருளும், வெகு பிரியத்துடன் காப்பாற்றும் மனைவியும் நமக்குச்சதமென வெண்ணி மனோராஜ்ஜியஞ்செய்து பேராசைப் பேய் பிடித்தலைகிறோம். பேராசையைத் தொலைத்துப் பெருஞ்செல்வமாகிய மோக்ஷத்தைத்தேட முயற்சிப்பவருண்டோ?

*
* *

[illegible] 'பதாவிற்றுப் பணத்தை முடி' என்று பலர் தான் சாகும்வரையிற் சம்பாதிக்கும் பொருளை என்னசெய்வது? நம்மோடுகூட ஒரு பைசாவேனும் வருமா? நாம் மரணதசையடைந்தால் நம்மையொருவர் பார்ப்பாரா? நமது நல்ல கதியைத்தேடினாலன்றி நற்கதிபெற முடியாது. அதற்கு வழி யாதெனில், நற்குருவை நாடி, நல்லுபதேசம் பெற்று நற்றவம் செய்து நாதனையடையவேண்டும். அஃதெப்படியெனில் ஒரு வனத்தில் மோக்ஷத்தையடைய இச்சையுடைய ஒருவர்

*
* *

[illegible] 'தேவனைநம்பித் தேற்றமடைவாய்' என்றபடி ஒருவர் ஈசுவரனையே நம்பி வேறொரு ஆசையுமின்றித் தவஞ்செய்துகொண்டு உலகப்பற்றை விடுத்து, அவர் பிரசாதத்தையே கருதி, வெயில், மழை, பனி, காற்றுமுதலிய ஒன்றுக்கும் அச்சமுறாமலும், ஆகாரம் தமக்கெதிரிற் கிடைத்தாலன்றி மற்றோரிடத்திலும் தேடாமல் வெகுநாள் இருந்தார். அவர் ஓர் கந்தையை வைத்து ஊசியையும் நூலையும் அக்கந்தையிற் குத்திக்குத்தி எடுப்பது வழக்கம். இங்ஙனமே வெகுநாள் இருக்குங்கால், கிருபைக்கடலாகிய ஈசுவரனும் பார்வதியும் இவன் மனத்தைச் சோதிக்க வந்து உமக்கு வேண்டிய ஐசுவரியத்தைக்கேளும்: தருகிறோம் என்றார்கள்.

*
* *

[illegible] 'உலகவின்பம் உருவலா மாயை' என்று இம்மகரிஷியெல்லா ஆசையையும் விட்டவராதலால் ஈசுவரன் வார்த்தையைக் கேட்டு மனத்தில் மகிழ்ந்து எனக்கு ஒன்றும் வேண்டாம் என்றார். அதற்கு ஈசுவரன் ஏதாவது கேள் தருகிறேன் என்று மறுபடியும் வற்புறுத்திக் கேட்டனர். அதற்கும் இவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அதைக்கேட்டுப் பார்வதி தன் மாயையால் ஓர் அழகிய பெண் வடிவங்கொண்டு அவர் எதிரே வந்து நின்றாள். இவர் என்ன திரும்பிப்பார்க்கிறாரா? இல்லை.

*
* *

[illegible] 'மோக்ஷத்திற்குவிரக்தியே பிரதானம்' என்றபடி சதா நிஷ்காமிய மனத்தனாய் மோக்ஷம் பெறுதலிலே ஆவலாய் இருப்பவராதலால் இவருக்கு இஃதெல்லாம் திரணமானதால் தன் சொந்த வேலையாகிய ஊசியைத் துணியில் விட்டு எடுப்பதே பார்வையாக இருந்துகொண்டிருந்தார். அம்மையும் வெட்கப்பட்டு ஈசுவரனிடத்துச் சென்று இனி என்னாலாகாது என்று தன் சுவரூபத்தோடு இருந்துவிட்டாள். மறுபடியும் ஈசன் அவ்வியாஜகருணாமூர்த்தியானதால் இவ்வருந்தவமுடையோனைநோக்கிஉனக்கு வேண்டியதைக் கேள் என்று மற்றொரு முறையும் கேட்டார். அதற்கு அவர்

*
* *

ஊசி போகும்வழியே நூல் போகவேண்டும் என்றார். என் செய்வார் ஈசன்? மிக்க பிரீதியுடன் அவன் உலக ஆசையை வெறுத்தவனாதலால் நம் காரியம் ஒன்றும் நடவாது. 'அவன் இனிப்பிறவாத பேரின்பக்கடலையடைவதற்கு வழி தேடுகிறான். அவன் அக்கதியே பெறட்டும், என்று தனது திருவுள்ளத்திற்சிந்தித்துத் தனது காளையிலேறிக்கைலயங்கிரியையடைந்தார்.

*
* *

ஆனதால், [illegible] முக்தியென்பது பிறக்காதிருத்தலே என்று மறுபடியும் இச்சென்மத்தை எடுத்துக்கர்ப்பத்தில் இருந்து அந்தோ! பெருந்துக்கம் அடைவது நன்றல்லவே. அதற்குச்செய்யவேண்டுவது யாதெனில் முக்தி வேண்டிற்பக்திவேண்டுமானதால் உலகெலாம் பொய்யென உண்மைமனத்தனாய் உத்தம ஆசானை நாடி அவனருள் பெற்று இச்சென்மத் தொல்லையை ஒழித்து ஆனந்தபதவியடைவதே பெருந்தொழிலாகக்கொள்ளல்வேண்டும். சுபம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]